

சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் புதூரில் உள்ள நியாயவிலைக் கடை மற்றும் கிட்டங்கியில் இருந்த அரிசி மற்றும் குடிமைப் பொருட்களை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திடீரென்று சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் ராஜேந்திர பிரசாத் ஆகியோர் உள்ளனர்.



திருச்செந்தூரில் ரூ.18 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலைய கட்டிடம் கட்டுவதற்கு மீன் வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்டினார். உடன் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர் மன்றத் தலைவர் சிவஆனந்தி ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை, மாவட்ட அயலக அணி துணைத் தலைவர் டேனியல், வழக்கறிஞர் கிருபா, விக்ரமன் கபடி கந்தன், நகர் மன்ற உறுப்பினர் செந்தில்குமார், ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, நந்தனம், அரசுக் கல்லூரியில் போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியானது காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், விருதுநகர் செந்தில் குமார நாடார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்ற தலைப்பில் மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ. ஆர்.ஆர்.சீனிவாசன் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெ.கண்ணன், ஆகியோர் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில் அனைத்து மாணவ , மாணவிகளும் ஏற்றுக்கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் சில்வார்பட்டி ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமை சரவணகுமார் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் தங்கவேல், பேரூராட்சி தலைவர் நடேசன், ஒன்றிய துணைச் செயலாளர் பாஸ்கர் அய்யன், விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் பரமசிவம் மற்றும் அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி கோனாம்பட்டி பாகம் எண் 199 ல் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கை சின்னமனூர் மேற்கு ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி பா.இராதாகிருஷ்ணன் தலைமையில் கிளை கழக நிர்வாகிகள் பெ.நடராஜ், ரா.சின்னச்சாமி, பெ.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை ஆத்திப்பட்டி ஊராட்சியில் கட்டகஞ்சம்பட்டி பகுதியில் 20 லட்சம் மதிப்பீட்டில் மாவட்ட கனிமவள அறக்கட்டளை மற்றும் PMKKKY திட்டத்தில் புதிய அங்கன்வாடி மையத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அடிக்கல் நாட்டினார். உடன் சேர்மன் சுப்பாராஜ், தலைமைச் செயற்குழு சாகுல் ஹமீது, ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகரில் முதல்வர் துவக்கி வைத்த 'தாயுமானவர்' திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கான உணவுப் பொருட்களை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மானாமரை நகர்மன்றத் தலைவர் எஸ் மாரியப்பன் கென்னடி, நகர் கழக செயலாளர் க. பொன்னுச்சாமி கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை. ராஜாமணி மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் உள்ளார்கள்.



விளாத்திகுளம் பேரூராட்சிக்குட்பட்ட 8வது வார்டு மீரான் பாளையம் தெருவில் பொது நிதியின் கீழ் ரூ.20லட்சம் மதிப்பீட்டில் சிறிய பாலம் அமைப்பதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டும் பணியை துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் பேரூராட்சி மன்றத் தலைவர் சூர்யாஅய்யன்ராஜ், ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல் உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் பூதிபுரம் பேரூராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் நடைபெற்றது. பூதிப்ரம் பேரூர் செயலாளர் பேரூராட்சி தலைவர் கவியரசு, ஒன்றியச் செயலாளர் ஐயப்பன், துணை தலைவர் பொன்னையா, பேரூராட்சி உதவி இயக்குனர் கிரிஸ்டோ தாஸ், தாசில்தார் சந்திரசேகர் மற்றும் கவுன்சிலர்கள் அரசு அதிகாரிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. வழிகாட்டலின் படி தமிழின தலைவர் நவீன தமிழகத்தின் சிற்பி என்றென்றும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினம் தொண்டி பேரூர் கழக சார்பில் (07.08.2025) அன்று மாலை 5 மனியளவில் தொண்டி பழைய பேருந்து நிலையம் கழக அலுவகத்தில் தலைவரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு பேரூர் கழகச் செயலாளர் எம்.எம்.இஸ்மத் நானா தலைமை தாங்கினார். கழக மூத்த நிர்வாகிகள், நகர துணை செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய பிரதிநிதிகள், வார்டு கழக செயலாளர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர் துணை தலைவர், கழக உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துனை அமைப்பாளர்கள், BLA 2 ,BLC,BDA க்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.